


எஸ்.ஐ.ஆர்.க்கு எதிராக திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் உடுமலைப் பேட்டை தளிரோடு நகராட்சி அலுவலகம் அருகில் திருப்பூர் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் கழக நிர்வாகிகள், கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

சென்னை வடக்கு, வடகிழக்கு, கிழக்கு, மேற்கு, தென்மேற்கு, தெற்கு – காஞ்சிபுரம், வடக்கு – திருவள்ளூர் கிழக்கு, மேற்கு, மத்திய மாவட்டங்களுக்குட்பட்ட

# மாவட்டச் செயலாளர்கள் - சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் - தொகுதி தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர்கள்- மாவட்ட சட்டத்துறை ஒருங்கிணைப்பாளர்கள் (DLC) கூட்டம்!

## துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி. அறிவிப்பு!



சென்னை வடக்கு, வடகிழக்கு, கிழக்கு, மேற்கு, தென்மேற்கு, தெற்கு - காஞ்சிபுரம் வடக்கு - திருவள்ளூர் கிழக்கு, மேற்கு, மத்திய மாவட்டங்களுக்குட்பட்ட மாவட்ட கழகச் செயலாளர்கள் - சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் - தொகுதி தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர்கள் (OTN) - மாவட்ட சட்டத்துறை ஒருங்கிணைப்பாளர்கள் (DLC) கலந்துரையாடல் கூட்டம் இன்று (13.11.2025- வியாழக்கிழமை) காலை 11.30 மணியளவில் சென்னை, தியாகராயர் நகர், ஓட்டல் அகார்டில் நடைபெறும். இக்கூட்டத்தில் சட்டத்துறை செயலாளர் என்.ஆர். இளங்கோ எம்.பி. கலந்து கொள்ள உள்ளார்.

அதுபோது மேற்குறிப்பிட்ட அனைவரும் தவறாது கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பொருள் : கழகத்தலைவர் அவர்கள் தலைமையில் 09.11.2025 அன்று நடைபெற்ற காணொலிக் காட்சி கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி கணக்கீட்டு படிவம் (Enumer ation Form) மீதான பணிகளை முழுமையாக முடிப்பது குறித்து!

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
09.11.2025

ஆ.இராசா எம்.பி.
துணைப் பொதுச் செயலாளர்
தி.மு.க.

முன்னாள் புதுக்கோட்டை மாவட்டச் செயலாளர் பெரியண்ணன் 28-ம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி!

# புதுக்கோட்டை வடக்கு - தெற்கு மாவட்ட கழகத்தினர் திரளாக பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் எஸ்,ரகுபதி - கே.கே,செல்லப்பாண்டியன் வேண்டுகோள்!





புதுக்கோட்டை. நவ. 13–

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், இயற்கை வளங்கள் துறை அமைச்சருமான எஸ். ரகுபதி, வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

புதுக்கோட்டை முன்னாள் மாவட்ட செயலாளரும், அரசு தலைமை கொறடாவுமான பெரியண்ணன் அவர்களின் 29ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு 15.11.2025 சனிக்கிழமை காலை 9 மணியளவில் மேலக்கோட்டையில் உள்ள பெரியண்ணன் அவர்களின் சமாதிக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது. இதனைத் தொடர்ந்து காலை 10 மணியளவில் இரத்த தான முகாம் நடைபெறுகிறது. இந்நிகழ்வுகளில் புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகி கள், தலைமைச் செயற்குழு. பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய பெருந்தலைவர்கள், துணைப் பெருந்தலைவர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர், அமைச்சர் எஸ்.ரகுபதி, வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் தமது அறிக்கையில கூறி உள்ளனர்.

ஈரோடு மாவட்டம்

# மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு - கண்காணிப்பு குழுக்கூட்டம்!

## குழுத்தலைவர் / கே.இ.பிரகாஷ் எம்.பி. தலைமையில் நடைபெற்றது!




ஈரோடு, நவ. 13-

ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில்நேற்று முன்தினம் (11.11.2025) மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழுக்கூட்டம், குழு தலைவர் /ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட வளர்ச்சி, ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழுவின் நோக்கம் ஒன்றிய அரசுகளின் திட்டங்களை செயல்படுத்தும்போது அவை மக்கள் பிரதிநிதிகளால் கண்காணிப்பிற்கு உட்படுத்தப்பட்டு முறையான நிதிகள் சென்று சேர்வதையும், அதன் பணிகளை துரிதப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் இக்கூட்டம் நடத்தப்படுகிறது.

மேலும், இக்கூட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் 1,90,704 பதிவு செய்த குடும்பங்களில் 70,490 குடும்பங்களுக்கு வேலை வழங்கப்பட்டுள்ளது. மேலும் வாய்க்கால் தூர்வார்தல் மண் கரை, கல் கரை, பண்ணை குட்டை அமைத்தல், முடிவுற்ற சாலைப்பணிகள், மகளிர் சுய உதவிக்குழு அமைத்தல் வங்கி நிதி இணைப்பு, திறன் வளர்ப்பு பயிற்சி, தொடர்பாகவும் ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் கீழ் வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்ட விபரம், பிரதம மந்திரி கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் முடிவுற்ற சாலை பணிகளின் விபரம், ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தில் ஊரகப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட குடிநீர் இணைப்புகள் விபரம். வழங்கப்பட வேண்டிய குடிநீர் இணைப்புகளுக்கு மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் விபரம். நகர்ப்புற வளர்ச்சித்துறையின் சார்பில் ஈரோடு மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டம், அம்ரூத் 2.0 திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளின் நிலைகள், பெரும்பள்ளம் ஓடை மேம்பாட்டு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

மேலும் பவானி நகராட்சிப் பகுதியில் குடிநீர் திட்ட அபிவிருத்தி பணி. சுத்திரிகரிப்பு நிலையம் அமைத்தல் பணி, கோபி செட்டிபாளையம் நகராட்சி பகுதியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் பணி. சத்தியமங்கலம் நகராட்சியில் குடிநீர் அபிவிருத்தி மற்றும் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டப்பணிகள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் உங்கள் தொகுதியில் திட்டத்தின் மூலம் பராமரிப்பு கூட்டுக் குடிநீர் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2.0 வளர்ச்சி பணிகள், பேரூராட்சிகள் நிர்வாகம் சார்பில் தனிநபர் கழிப்பிடம், அம்ரூத் 2.0 திட்டத்தில் அனைவருக்கும் குடிநீர் வழங்கும் திட்டம், அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் ஜல் ஜீவன் மிஷன், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் தேசிய உணவு பாதுகாப்பு மற்றும் சமூக நலத்திட்டம் குறித்து ஆய்வு திட்டங்களில் புனரமைக்கும் பணி, புஞ்செய்புளியம்பட்டி மேற்கொண்டார்.

தொடர்ந்து, பள்ளிக்கல்வித் துறையின் சார்பில் பள்ளி செல்லா குழந்தைகள், உட்கட்டமைப்பு பணிகள், உயர் தொழில் நுட்ப ஆய்வகம், மின்சார வாரியத்தின் சார்பில் தற்பொழுது தனி விவசாய மின்னூட்டி அமைத்தல், மேற்கொள்ளப்பட்டு வரும் மின்பாதை பணிகள், வேளாண்மை உழவர் நலத்துறையின் சார்பில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் பெறப்பட்ட நிதிகளின் எய்தப்பட்ட சாதனை விபரம், இயற்கை விவசாயம், பயிர் காப்பீட்டு திட்டத்தின் பயிர் காப்பீடு செய்துள்ள விவசாயிகள் விபரம், நுண்ணீர் பாசன திட்டம், தோட்டக்கலை மற்றும் மலை பயிர்கள் துறை சார்பில் தேசிய மூங்கில் இயக்கம், வேளாண்மை வேளாண்மைப் பொறியியல் துறையின் சார்பில் வேளாண் இயந்திர மாக்கல் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு மின் மோட்டார். பம்ப் செட்டுகள் வழங்கப்பட்ட விபரங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் தேசிய காசநோய் ஒழிப்பு திட்டம், பெண்கள் ஆண்கள் குடும்ப நல அறுவை சிகிச்சை இழப்பீட்டு தொகை, கதர் கிராம தொழில்கள் வாரியம், நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை, கனிமவளத் துறை, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, நெடுஞ்சாலைத்துறை, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை, சத்தியமங்கலம், கோபி செட்டிபாளையம் மற்றும் பவானி நகராட்சிகள் கால்நடை பாராமரிப்புத்துறை, உள்ளிட்ட துறைகளின் சார்பில் நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்டப்பணிகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும் கடந்த 16.07.2025 ல் நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட திட்டங்களின் நடவடிக்கைகள் தொடர்பாக துறை வாரியாக அலுவலர்களிடம் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது.

ஈரோடு மாவட்டத்தில் அரசின் திட்டங்கள் அனைத்து தரப்பு மக்களுக்கும் கிடைக்கின்ற வகையில் அனைத்துத்துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமெனவும், மேலும், ஈரோடு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்டப்பணிகளை பொதுமக்கள் பயன்பெறும் வகையில் விரைவாக முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டுமெனவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம், ஈரோடு மாநகராட்சி மேயர் திருமதி.சு. நாகரத்தினம் சுப்பிரமணியம், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி.அ.சுஜாதா, ஈரோடு மாநகராட்சி ஆணையர் அர்பித் ஜெயின் இ.ஆ.ப., உதவி ஆட்சியர்(பயிற்சி) செல்வி.காஞ்சன் சௌதரி, திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) திருமதி.பிரியா, மாவட்ட வன அலுவலர் குமிலி வெங்கட அப்பால நாயுடு, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் முகமது குதுரத்துல்லா (பொது), உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி

## மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க.விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி. அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணியின் தஞ்சை வடக்கு மாவட்டம் - கும்பகோணம் மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### தஞ்சை வடக்கு மாவட்டம்

### கும்பகோணம் மாநகரம்

அமைப்பாளர் - பி. கண்ணன் 77/36, சாரங்கபாணி தெற்கு வீதி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) டி. கண்ணன் 31-3/16பி, பாணாதுறை கீழ வீதி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 2) எ. பாலாஜி 16சி, சர்வாண்ய கீழத் தெரு, மேலக்காவேரி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 3) எம். சண்முகம் பிளாட் எண். 10, சோழன் நகர், மேலக்காவேரி, தஞ்சாவூர் மாவட்டம். 4) எஸ். ராம்குமார் 90ஏ, 3வது கிராஸ் விரிவு, ஸ்ரீநகர் குடியிருப்பு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 11-11-2025.

தயாநிதி மாறன், எம்.பி.,
செயலாளர்
தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி







கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலை எதிரே கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் தலைமையிலும், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளரும், ஓசூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான பிரகாஷ் முன்னிலையிலும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகளின் கண்டன உரையுடன் பிரம்மாண்டமான கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கோபிநாத், சட்டமன்ற உறுப்பினர் ராமச்சந்திரன், மாநில அமைப்புசாரா ஓட்டுனர் அணி மாநில செயலாளர் செங்குட்டுவன், மாநகர மேயர் சத்யா, உள்பட கழக கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் திரளாக கலந்துகொண்டு கண்டன முழக்கமிட்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.கே. கோட்டையப்பன்

### நவம்பர் 13 (1996)



**தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.**

**ஒன்றுபட்ட திருநெல்வேலி மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**சிவந்திப்பட்டி பஞ்சாயத்து தலைவராகவும் – மாவட்ட நிலவள வங்கி தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் "இளைஞர் அணியின் செயல்திறன் மிக்க சிங்கக் குட்டியாகவும், அனைவரையும் அரவணைத்து கழகத்தின் ஆக்கப்பணிகளை அயர்வின்றி நிறைவேற்றுகிற அமைதியின் உறைவிடமாகவும் திகழ்ந்தவர்" என தனது இரங்கல் உரையில் குறிப்பிட்டுள்ளார்.**

தலைமைக் கழகம்
தி.மு.க.